C-17

உ

# சிறீ விட்ணு நாமாவளிகளும் பக்திப் பாடல்களும்

தீபாவளி



வெளியீடு

1969 1969

தொகுத்தவர்: சோழபுரம் சிவசாமி

நாரயணா நாரயணா
ஓம் நமோ நாராயணா
ஓம் நமோ நாராயணா
ஓம் நமோ நாராயணா.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

ஓம் நமோ நாராயணா

# சிறீ விட்ணு

## நாமாவளிகளும், பக்திப் பாடல்களும்

### பொன்னாலை வரதராயப் பெருமான்
### தேர் திருப்பணி நிதிக்காக.

---

தீபாவளி வெளியீடு — 1969

தொகுத்தவர்: **சோழபுரம் சிவசாமி.**

விலை ரூபா ஒன்று.

பதிப்புரிமை:- **தேர்த் திருப்பணிச் சபைக்கே உரியது.**

# முன்னுரை.

பக்த சிரோன்மணிகளே!

ஆதிமத்தியாந்த ரகிதனும் அசனுமாகி வளர்ச்சியும் குறைதலும் இல்லாதே சர்வ பூதாத்த ஆத்மாவாயும் சிருட்டியாதி காரணங்களான அனைத்துக்கும் காரணமாயும் எப்போதும் ஆனந்த சொரூபமாயும் விளங்கும் சிறீ அச்சுதனே!

சர்வ வியாபியாய் எங்கும் எவருடைய உள்ளத்திலும் நிறைந்திருந்து புத்தியைக் கற்பிக்கும் பகவான் சிறீ நாராயணனே!

எந்தப் பரப் புருடனுடைய சுய ரூபத்தை இன்னதென்று யோகீசுவர்களாலும் சொல்ல முடியாதோ, எந்தப் புருட

உ

ஓம் நமோ நாராயணாய நமக

## திருச்சிற்றம்பலம்

**ஆனை முகன் ஆறு முகன் அம்பிகை பொன்னம்பலவன்**
**ஞான குரு வாணி பதம் நாடு.**

**நிற்கின்ற தெல்லாம் நெடுமால் என்று ஓராதார்**
**கற்கின்ற தெல்லாம் கடை.**

சீர்பூத்த செழுங்கமலத், திருத்தவிசில் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும், நிலமகளும் அடிவருட
சிறைப்பறவை புறம்காப்ப, சேனையர் கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய் மார்பில், ஞாயிறுபோல் மணிவிளங்க
அரிய வானவர்க் கடிந்த, ஐம்படையும் புடைதயங்க
கரிய மால்வரை முளரிக்காடு, ஈன்று கிடந்தாங்கு

பாயிர நான் மறை பரவ, பாற் கடலில் பருமணிச்சூட்டு
ஆயிரவாய்ப் பாம்பு அணைமேல், அறிதுயிலின் இனிது அமர்ந்
தோய்.

வைகுந்தா! மணிவண்ணனே! என் பொல்லாத் திருக்குறளா!
என்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும், எமது ஆயவான் ஏறே!
செய்குந்தா! அரும் தீமை, உன்னடியார்க்குத் தீர்த்து
அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா, உன்னை நான் பிடித்தேன், கொள் சிக்கனவே.

கொண்டல் வண்ணா! குடக்கூத்தா! வினையேன் கண்ணா!
கண்ணா! என்
அண்டவாணா! என்றுன்னை, ஆளக்கூப்பிட்டு அழைத்தக்கால்
விண்தன்மேல்தான், மண் மேல்தான், விரிநீர்க்கடல்தான்,
மற்றுந்தான்
தொண்டனேன் உன்கழல் காண, ஒருநாள் வந்துதோன்றாயே

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம், வந்துஎங்கள் குழாம்புகுந்து
கூடும் மனமுடையீர்கள், வரம்பொழி வந்து, ஒல்லைக்கூடுமினோ
நாடும் நகரமும் நன்கு அறிய, நமோ நாராயணாய என்று
பாடும்மனமுடைப் பத்தருள்ளீர், வந்து பல்லாண்டுகூறுமினே

எண்ணரிய அன்பர்களைத், தன்னருள் தந்து இனிதாண்ட
எம்மான் தொண்டு
பண்ணுவதே கடமை என்று, வாழ்கின்ற பெரியோர்கள்,
பரவும் மெய்யன்
தண்ணரிய! சேவடி நினையும், பக்தருளக் கோயிலினில்
தங்கும் அப்பன்
கண்ணன்! அருட்கடல்! மேக வண்ணன்! உயிருக்குயிரான
கழகள் போற்றி.

ஓம் நமோ நாராயணு ஓம் நமோ நாராயணு (3 தரம்)

ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி; நாலு மூர்த்தி, நன்மை சேர்;
போக மூர்த்தி, புண்ணியத்தின்; மூர்த்தி, எண்ணில்
மூர்த்தியாய்;
நாக மூர்த்தி, சயனமாய்; நலங்கடல் கிடந்து மேல்
ஆகமூர்த்தி ஆயவண்ணம்; என் கொல் ஆதி தேவனே.

கீதங்கள் பாடுதல், ஆடுதல் அல்லால்
கேட்டறியோமுனைக், கண்டறிவாரை.
ஆடுவதும். பாடுவதும்; ஆனந்தமாக நினைத்-
தேடுவதும்; நின்னடியார் செய்கை; பராபரமே.

மெய்யில் வாழ்க்கையை; மெய்யெனக் கொள்ளுமிவ்
வையம் தன்னெடும்; கூடுவதில்லையான்
ஐயனே அரங்கா! என்றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தேன்; என்தன் மாலுக்கே.

பக்தி பண்ணிப் பிழைக்கச் சொன்னன்.
பலனை எண்ணுமல்,உழைக்கச் சொன்னன்.

ஓராயிரமாய், உலகேழ் அளிக்கும்
பேராயிரம் கொண்ட, ஓர் பீடுடையன்
காராயின காள, நன் மேனியினன்
நாராயணன் நங்கள், பிரான் அவனே.

பிறர்படும், துயர்தனை; தனதெனக், கருதுவான்
அவனே உண்மை; வைட்டணவன்.
குலந் தரும், செல்வம் தந்திடும், அடியார் படுதுயர் ஆயின
எல்லாம்
நிரந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு,
பெருநிலம் அளிக்கும்

வலந்தரும், மற்றும் தந்திடும்; பெற்றதாயினும், ஆயின
செய்யும்
நலந்தரும் சொல்லை, நான் கண்டு கொண்டேன்; நாராயணா,
என்னும் நாமம்
மீன் ஆமை கோலநெடு, நரசிங்கமாகி; நிலம் விரகால்,
அளந்த குறளாய்
ஆனது சீறுபழுவல், வில்லும் வெல்லுமுனை; அலமுற்ற,
செங்கையவராய்

வானநாடர் வந்துதொழ; மண்நாடா யாவரையும்,
மடிவிக்கவந்தவடிவாய்
நாலுவிதங் கொள், பரியாளாக நின்றருளும் நாராயணாய
நமவே
நாராயணனே நமதாண்டவனும்; நாராயணனே நமதா
சிரியன்

நாராயணனே ஞாலத்துயிராம்; நாராயண ஓம் என நாம்
பணிவோம்
மூலமே என்ற கரி, முன் வந்து, இடர் தொலைத்து
நீல மேகம்போல, நின்றானைப் — பால் ஆய
வேலை நடுவில் துயிலும் வித்தகனை! நாரணனை!
மாலை! அன்றிப் பாடாது, என்வாய்!

நாராயணு நாராயணு ஓம் நமோ நாராயணு
ஓம் நமோ நாராயணு ஓம் நமோ நாராயணு

அன்று உலகு அளந்த ஓம் நமோ நாராயணு
அயனைத்தந்த அரியே ஓம் நமோ நாராயணு
அன்பர்க் கருளும் தேவா ஓம் நமோ நாராயணு
அரவம் மேல் துயில்பவனே ஓம் நமோ நாராயணு [நா]

வட மதுரை மைந்தா ஓம் நமோ நாராயணு
கடல் கடந்த மாதேவா ஓம் நமோ நாராயணு
மனதிற் கினிய செல்வா ஓம் நமோ நாராயணு
நந்த கோபன் குமரா ஓம் நமோ நாராயணு [நா]

யசோதை இளஞ் சிங்கமே ஓம் நமோ நாராயணு
யமுனை யுறையும் தேவா ஓம் நமோ நாராயணு
சகடை உதைத்த வீரா ஓம் நமோ நாராயணு
சங்கு சக்கரக் கையா ஓம் நமோ நாராயணு [நா]

ஆயர் குல விளக்கே ஓம் நமோ நாராயணு
ஆமை ஆக வந்தவனே ஓம் நமோ நாராயணு
கார் மேனி வண்ணணே ஓம் நமோ நாராயணு
காக்கும் தெய்வம் நீயே ஓம் நமோ நாராயணு [நா]

பாற் கடலில் துயின்றவனே ஓம் நமோ நாராயணா
பாம்பில் ஆடும் பாலகனே ஓம் நமோ நாராயணா
மாவாய் பிளந்த தேவா ஓம் நமோ நாராயணா
மாடுகளை மேய்த்தவனே ஓம் நமோ நாராயணா [நா]

இருதயத் துறையும் தேவா ஓம் நமோ நாராயணா
பிரகலாதன் தன்னைக் காத்த ஓம் நமோ நாராயணா
உந்து மதக் களிறே ஓம் நமோ நாராயணா
உலகம் உண்ட உத்தமா ஓம் நமோ நாராயணா [நா]

குடை பிடித்த கோவிந்தா ஓம் நமோ நாராயணா
குறைகள் நீக்கும் கோபாலா ஓம் நமோ நாராயணா
ஊது குழல் உடையவனே ஓம் நமோ நாராயணா
ஊழி முதல்வன் ஆனவனே ஓம் நமோ நாராயணா [நா]

மற்றுமோர் தெய்வமுண்டோ? மதிபிலா மானுடர்காள்
உற்ற போதன்றி நீங்கள், ஒருவனென்று உணரமாட்டீர்
அற்றமேல் ஒன்றறியீர், அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த எந்தை, கழலினை பணிமின்நீரே.

செல்வம் எல்லாம் தந்தவனே ஓம் நமோ நாராயணா
செங்கண் விடை ஆனவனே ஓம் நமோ நாராயணா

தேவகி பெற்ற மைந்தா ஓம் நமோ நாராயணு
பேய் முலே உண்டவனே ஓம் நமோ நாராயணு [நா]

கொடிய கம்சனேக் கொன்றவனே ஓம் நமோ நாராயணு
பொன்னடி சேர்க்கும் செல்வா ஓம் நமோ நாராயணு
ஓடாத தோள் வலியா ஓம் நமோ நாராயணு
கோபியர் ஏத்தும் தேவா ஓம் நமோ நாராயணு [நா]

போற்றிப் புகழ்ந்தோ முன்னே ஓம் நமோ நாராயணு
சரணம் சரணம் நாராயணு ஓம் நமோ நாராயணு
நாராயணு நாராயணு ஓம் நமோ நாராயணு
ஓம் நமோ நாராயணு - ஓம் நமோ நாராயணு

கருங்கன் தோகைமயிற்பீலி அணிந்து, கட்டி நன்குடுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான், அவனெருவன் குழல் ஊதினபோது
மரங்கள் நின்று மது தாரைகள் பாயும், மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூப்பும் திருமால் நின்ற, நின்ற பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே

பண்டு மீன்றும் மேலுமாய் ஓர் பாலனாகி ஞாலமேழ்
உண்டு மண்டி ஆலிலைத் துயின்றஆதி தேவனே
வண்டு கிண்டு தண்துழாய் அலங்கலாய்க் கலந்தசீர்ப்
புண்டரீகப் பாவைசேரும் மார்ப! பூமிநாதனே.

இடஅணரை இடத்தோளொடு சாய்த்து இருகை கூடப்
புருவம் நெரித்தேறக்
குடவயிறு படவாய் கடைகூடக் கோவிந்தன் குழல்கொடு
ஊதினபோது
மடமயில்களொடு மான்பிணை போலே மங்கைமார்கள்
மலர்க்கூந்தல் அவிழ
உடைநெகிழ, ஓர்கையால் துயில் பற்றி ஒல்கி, ஓடு அரிக்கண்
ஓட நின்றனரே

இனிதிரைத் திவலை மோத எறியும் தண் பரவை மீதே
தணிகிடந்து அரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மான்
கனியிருந் தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனி அரும் புதிருமாலோ என் செய்கேன் பாவியேனே

நன்மை தீமைகள் ஒன்றுமறியேன், நாரணா என்னும் இத்தனை யல்லால்
புன்மையாலுன்னைப் புள்ளுவம் பேசி; புகழுவானன்று கண்டாய் திருமாலே
உன்னுமாறுன்னை ஒன்றுமறியேன் ஓவாத நமோ நாரணா என்பன்
வன்மையாவதுன் கோயிலில் வாழும்; வைட்டணவனென்னும் வன்மை கண்டாயே,

கோவிந்தா சய சய கோபால சய சய
ராதா ரமண அரி கோவிந்த சய சய [3 தரம்]

பொன் திகழும் மேனி புரிசடைப் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும் என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவனங்கத்து என்றுமுளன்.

கோபாலா கோபாலா கோமள பதயுக கோவிந்தா
கோபாலா கோபாலா வாசுதேவாய கோவிந்தா
கோபாலா கோபாலா அச்சுதாய கோவிந்தா

கோபாலா கோபாலா கேசவாய கோவிந்தா
கோபாலா கோபாலா ஆதிமூலாய கோவிந்தா
கோபாலா கோபாலா பரமாத்மனே கோவிந்தா
கோபாலா கோபாலா நாராயணாய கோவிந்தா
கோபாலா கோபாலா செகன் நாதாய கோவிந்தா
கோபாலா கோபாலா சனார்த்தனாய கோவிந்தா

தாழ்சடையும் நீள் முடியும் ஒண் மழவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால் சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

அச்சுதம் கேசவம் ராம நாராயணம்
கிருட்ண தாமோதரம் வாசுதேவம் அரிம்
சிறீ தரம் மாதவம் கோபிகா வல்லபம்
சானகி நாயகம் ராமச்சந்திர பசே!

நாடிலும் நின்னடியே நாடுவன் நாள்தோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன் சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவோற்கு
என்றாகில் என்னே எனக்கு!

பாண்டுரங்கா பாண்டுரங்கா ஜய ஜய ஜய பாண்டுரங்கா
ஜய ஜய விட்டலா பாண்டுரங்கா ஜயஹரி விட்டலா பாண்டு
ரங்கா
பாற்கடல் நாதா பாண்டுரங்கா பன்கைசயனு பாண்டுரங்கா
பாண்டவர் தூதா பாண்டுரங்கா பச்சைவர்ணு பாண்டுரங்கா
பாட அருளும் பாண்டுரங்கா பரமதயாளா பாண்டுரங்கா
பாவம் தீர்க்கும் பாண்டுரங்கா பக்தவத்சலா பாண்டுரங்கா
பாலகிருஷ்ணு பாண்டுரங்கா பரசுராமா பாண்டுரங்கா
பாண்டுரங்கா பாண்டுரங்கா பரந்தாமா பாண்டுரங்கா

தண்துளவம் புனைதார் அரங்கா! ஐவர் தையலுக்கு
வண் துகில் ஒன்று அவைக்கண் உற்றபோது தன்மன்னர்
முன்னே
கண் துளி சோரத் தொழுது நின்பேர் கட்டுரைத்த பின்னே
ஒண் துகில் கோடி குவிந்தது எம்மாயம் உரிந்து உரிந்தே

கோவிந்த சய கோவிந்தா - கோவிந்த சய கோவிந்தா
கமலா வல்லப கோவிந்தா - கமனீயாயன கோவிந்தா
வேணு விலோலா கோவிந்தா - விசய கோபாலா கோவிந்தா
கஞ்ஜ விலோசன கோவிந்தா - காளிய மர்த்தன கோவிந்தா

யதுகுல திலகா கோவிந்தா - நித்யானந்தா கோவிந்தா
பக்த வத்சல கோவிந்தா - பாகவதப் பிரியா கோவிந்தா
நந்த குமாரா கோவிந்தா - நவனீத சோரா கோவிந்தா
தீன தயாளா கோவிந்தா - தீன பந்து கோவிந்தா
முரளி தரசிறீ கோவிந்தா - முகுந்த மாதவா கோவிந்தா
ராதா ரமணு கோவிந்தா - ராசீவ நேத்ரா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா - கோகுல நந்தன கோவிந்தா

மாயா மணிவண்ணனே மதுசூதா நீ அருளாய்
தீயாய் நீராய் நிலனுய் விசும்பாய் காலாய்
தாயாய் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்
நீயாய் நீ நின்றவாறு இவை என்ன நியாயங்களே

சாடு சாடு பாதனே சலங் கலந்த பொய்கை வாய்
ஆடரவின் வன்பிடர் நடம் பயின்ற நாதனே
கோடு நீடு கைய செய்ய பாதம் நாளும் உள்ளினல்
வீடனுக மெய் செயாத வண்ணம் என்கொல் கண்ணனே

கண்ணனே கண்ணனே கார்முகில் வண்ணனே
கண்ணனே கண்ணனே காக்கும் தெய்வக் கண்ணனே

கருடவாகனக் கண்ணனே கம்சனை வென்ற கண்ணனே
கருணை செய்து நீயுமே அன்பு செய் கண்ணனே

அன்பர் உள்ளம் தேடியே அமர்ந்து அருளும் கண்ணனே
அமரர் தன்னைக் காக்கவே அமிர்தம் பகிர்ந்த கண்ணனே
அதர்மம் வளர்ந்து வந்தாலே அறிந்து அளிக்கும் கண்ணனே
அபயம் என்று வந்தோமே அல்லர்தீர் கண்ணனே

பாற்கடல் தன்னிலே பள்ளிகொள்ளும் கண்ணனே
காளிங்கன் தலையிலே ஆடிக்கொன்ற கண்ணனே
சாதி மதம் இன்றியே அருள் செய்யும் கண்ணனே
கானம் இசைந்து நீயுமே ஆண்டு அருள் கண்ணனே (க)

சின்னப்பிள்ளை ஆகியே தயிரை உண்ட கண்ணனே
சிங்க முகம் கொண்டுமே தூணில் வந்த கண்ணனே
திருமகள் தன்னையே மார்பில் வைத்த கண்ணனே
தினமும் உன் நாமத்தை ஓதச் செய் கண்ணனே (க)

பீதாம்பரம் அணிந்த நீலவர்ணக் கண்ணனே
கீதம் குழலில் இசைத்துமே கோபியர் கவர்ந்த கண்ணனே
தீப தூபம் தந்துமே பாடிப் புகழ்ந்தோம் கண்ணனே
நீயும் உவந்து வந்துமே காத்து அருள் கண்ணனே (க)

உறியில் தயிரை விரும்பியே களவாய் உண்ட கண்ணனே
உலகம் தன்னைக் காக்கவே இலையில் மிதந்த கண்ணனே
உண்ட உலகை உமிழ்ந்துமே இன்றும் காக்கும் கண்ணனே
உன்னடி பணிந்திட உவந்தருள் கண்ணனே (க)

கூடிப்பாடும் பக்தரின் குறைகள் தீர்க்கும் கண்ணனே
ஊதுகுழல் ஏந்தியே ஆடிவரும் கண்ணனே
சூதில் தோர்த்த ஐவரின் மானம் காத்த கண்ணனே
தூய வாழ்வு வாழவே அருள் செய் கண்ணனே (க]

கெட்ட அரக்கர் பலரையே கொன்று வென்ற கண்ணனே
செல்வம் தந்து அருளும் லட்சுமி விரும்பும் கண்ணனே
தென் திசை நோக்கியே சயனம் செய்யும் கண்ணனே
எம் வினை நீக்கியே எமக்கருள் கண்ணனே (க)

தேடித் தேடி நாமுமே நாடிவந்தோம் கண்ணனே
பேரருள் தந்தருள் மா மாயக் கண்ணனே
கேசவா மாதவா மாடு மேய்த்த கண்ணனே.
பேதை துயர் தீரவே வந்து அருள் கண்ணனே (க)

கையில் வில்லு ஏந்திய ராமனுய் வந்த கண்ணனே
தையலர் இருவர் தன்னை உவந்து அணைத்த கண்ணனே
மைநிறக் கண்டனும் வேறே சொல் கண்ணனே
சைவம் என்று சொல்வதும் ஒன்றுதானே கண்ணனே (௧)

ஒருத்தி மகனுய்ப் பிறந்துமே ஒழிந்து வளர்ந்த கண்ணனே
கொன்றை மாலை அணிந்தோனை காத்தாய் நீயும் கண்ணனே
பொன்னி சூழ் சிறீரங்கம் உவந்து உறையும் கண்ணனே
சொல் மாலை சூட்டிட நீ அருள் கண்ணனே

போற்றிப்போற்றி உன்னையே பாடிப் புகழ்வோம் கண்ணனே
தோன்றி மறையும் உலகிலே தேடி நிற்போம் கண்ணனே
கோவிந்தா நீயுமே ஓடி வா கண்ணனே
கோபாலா என்போமே ஆடிவா கண்ணனே (௧)

ஓடிவா ஓடிவா ஓடிவா கண்ணு ஆடிவா ஆடிவா ஆடிவா கண்ணு
அகில உலகம் காக்கும் கண்ணு அடியார் அல்லல் நீக்கும் கண்ணு

அமரர் போற்றி அழைக்கும் கண்ணு அன்பர் உள்ளம்
உறையும் கண்ணு
ஆயர் குலத்தில் பிறந்த கண்ணு ஆலமிலையில் துயின்றகண்ணு
ஆதி சேடனில் அயரும் கண்ணு ஆமையாகியும்
வந்த கண்ணு (ஓ)

இனிய கீதம் இசைக்கும் கண்ணு இரணியன் தன்னைக்
கிழித்த கண்ணு
சின்னப் பிள்ளை ஆகியே கண்ணு சிரித்துப் பாம்பில்
ஆடினாய் கண்ணு
தீவினை தீர்க்கப் பிறந்த கண்ணு லீலைகள் பலவும்
புரிந்த கண்ணு
மீனவதாரம் எடுத்த கண்ணு பீதாம்பரமும்
அணிந்த கண்ணு (ஓ)

புருசோத்தமனே பரமதயாளா புண்ணிய புருசா பக்தர்
சகாயா
துளசிதரனே தாமோதரனே உலகமுண்ட மதுசூதனனே
சூதில் வென்ற துரியோதனனை சூழ்ச்சிசெய்து வென்றகண்ணு
மூவா முதல்வா முகில்வண்ணு தூணில் தோன்றிய
நரசிம்மா (ஓ)

வெங்கடேசா வெண்ணெய் உண்டவா செங்கண்ணு
மணிவண்ணு
வெங்கடரமணு சங்கடகரணு சங்குசக்கரம் ஏந்திய கண்ணு
வேணு கோபால வேத முதல்வா வேங்குழலூதி
இசைக்கும் கண்ணு
தேவானுகூலா தேவர் தேவா பேச்சி முலையை உண்டகண்ணு
வைகுண்டவாசா வாசுதேவா வையம் காக்கும் வைகுந்தா
தையலர் இருவர் நாடிய தேவா பாம்பில் துயிலும்
பன்னகசயனு (ஓ)

கொடிய அசுரரைக் கொன்ற தேவா தாயினுமினிய
காரொளிவண்ணு
பொல்லா மணியே நாராயணனே நாணு உபாயா தசரத
தனயா
கோகுலம் பிறந்த கோபாலா கோபியர் உள்ளம்
கவர்ந்த கண்ணு
போற்றிப் புகழ்ந்தோம் பக்தர் சகாயா பொன்னடிகாண
வந்தோம் கண்ணு (ஓ)

பத்துடை அடியவற்கு எழியவன் பிறர்களுக்கு அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள்

மத்துறு கடை வெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே

அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃதுண்டு உமிழ்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றும் எல்லாமும் அறிந்தனமே

முடிச் சோதியாய் உந்தன் முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின்னபம் பொன்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே!

உன்னடியில் அன்பு வைத்தோம் கண்ண பரமாத்மா
உலகமெலாம் நீ எனக்கு கண்ண பரமாத்மா
வன்னமயில் காலையிலே கண்ண பரமாத்மா
வசந்த மணம் பரப்புகின்றாய் கண்ண பரமாத்மா
பொன் பரவும் அருணலிலே கண்ண பரமாத்மா
புன்னகை செய் அருளழகா கண்ண பரமாத்மா

மின்னொளிரும் மேகத்திலே — கண்ண பரமாத்மா
மின்னுவதுன் வண்ணமடா — கண்ண பரமாத்மா
வஞ்சனை செய் பூதகியை — கண்ண பரமாத்மா
வட்டமுலை உண்டு கொன்றாய் — கண்ண பரமாத்மா
பிஞ்சிளஞ்சேய் தளிரடியால் — கண்ண பரமாத்மா
மேயச் சகடை உதைத்தவனே — கண்ண பரமாத்மா
கன்றரக்கன் உடலை வீசி — கண்ண பரமாத்மா
கலகலெனக் கனியுதிர்த்தாய் — கண்ண பரமாத்மா
குன்றெடுத்துக் கோகுலத்தில் — கண்ண பரமாத்மா
கொடும் புயலில் தடுத்து நின்றாய் — கண்ண பரமாத்மா
நச்சரவு மேலிருந்தே — கண்ண பரமாத்மா
நர்த்தனம் செய் அர்த்தமென்னே — கண்ண பரமாத்மா
அச்சமில்லை அச்சமில்லை — கண்ண பரமாத்மா
அருள் எம்மைக் காக்குமப்பா — கண்ண பரமாத்மா
காற்றினில் பூங்குழலே — கண்ண பரமாத்மா
காதில் வந்து கொஞ்சுதப்பா — கண்ண பரமாத்மா
ஆற்றினிலும் வேத வொலி — கண்ண பரமாத்மா
ஆத்ம கசும் பேசுதப்பா — கண்ண பரமாத்மா

ஆவியிலே கலந்து விட்டாய் கண்ண பரமாத்மா
அறிவினுக்கும் அறிவானாய் கண்ண பரமாத்மா
நாவினிலே சொல்லச் சொல்ல கண்ண பரமாத்மா
நல்லமுதம் போலினிப்பாய் கண்ண பரமாத்மா

மாயன் என் நெஞ்சில் உள்ளான் மற்றும் எவற்கும் அதுவே
காயமும் சீவனும் தானே காலும் எரியும் அவனே
சேயன் அணியன் எவற்கும் சிந்தைக்கும் கோசரன் அல்லன்
தூயன் துயக்கன் மயக்கன் என்னுடைத் தோளிணையானே

ஆயர் கொழுந்தாய் அவரால் புடை யுண்ணும்
மாயப் பிரானை என் மாணிக்கச் சோதியை
தூய அமுதைப் பருகிப் பருகி என்
மாயப் பிறவி மயர்வு அறுத்தேனே.

பாசங்கள் நீக்கி என்னை உனக்கே அறக் கொண்டிட்டு நீ
வாச மலர்த் தண் துழாய் முடி மாயவனே அருளாய்
காயனும் சீவனுமாய் கழிவாய் பிறப்பு ஆய் பின்னும் நீ
மாயங்கள் செய்து வைத்து இவை என்ன மயக்குகளே

கோபாலா கோபாலா கோபியர் விரும்பும் கோபாலா
கோவிந்தா கோவிந்தா கோமள பதயுக கோவிந்தா
வருவாயே வருவாயே நின்னருள் தந்திட வருவாயே
தருவாயே தருவாயே வரங்கள் யாவும் தருவாயே

ராமா ராமா என்றாலே பாவம் எல்லாம் தீர்ப்பாயே
ரங்கா ரங்கா என்றாலே கவலை யெல்லாம் ஒழிப்பாயே
கண்ணா கண்ணா என்றாலே கனவிலேனும் வருவாயே
கிருட்ணா கிருட்ணா என்றாலே கிருபைசெய்து அருள்வாயே [கோ]

நாமம் சொல்லிப் புகழ்ந்தாலே நாவில் நன்றாய் இனிப்பாயே
தூபம் துளசி தந்தாலே துயரம் எல்லாம் தீர்ப்பாயே
இசை பலபாடி அழைத்தாலே புல்லாங்குழலுடன் வருவாயே
தினம் தினமுன்னை நினைத்தாலே நீயும் எம்முன்
உறைவாயே (கோ)

இடையர் குலத்தில் பிறந்துமே கோபியர் உள்ளம்
கவர்ந்தாயே
பாம்பில் சயனம் செய்துமே பல்லுலகெல்லாம் காப்பாயே

பாண்டவர்தம்மை காத்திடவே பரந்தாமனுய்ப் பிறந்தாயே
பாடும் அடியார் புகழ்ந்திடவே பாரில் வந்து
அருள்வாயே (கோ)

விண்மீது இருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்
மண்மீது உழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்
என் மீது இயன்ற புற அண்டத்தாய் எனது ஆவி
உன்மீது ஆடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ?

அங்கையில் நேமி சங்குவாள் தண்டொடு அடல் சரா
சரங்கன் அருள்வோன்
சங்கையில் மறைகள் ஆயிரங்களுக்கும் சாற்றுவதற்கரிய
தத்துவத்தோன்
கங்கையின் அறலும் காளியன் முடியும் காளத்திக்
கரையுமே கமழும்
பங்கய மலர்கள் இரவும் நண்பகலும் பணிந்து பாடுதும்
அவன் புகழே.

மீனமாகியும் கமடமதாகியும் மேருவை எடுக்கும் தாள்
ஏனமாகியும் நர அரியாகியும் எண்ணருங் குறளாயும்

கூனல்வாய் மழுதரித்த கோவாகியும் அரக்கரைக்
கொலைசெய்த
வாண நாயகனுகியும் நின்ற மால் மலரடி மறவேனே

கண்ணன் எங்கள் கண்ணனும் கார்மேக வண்ணனும்
வெண்ணையுண்ட கண்ணனும் மண்ணையுண்ட கண்ணனும்
குழலினுலே மாடுகள் கூடச்செய்த கண்ணனும்
கூட்டமாகக் கோபியர் கூட ஆடும் கண்ணனும்
மழைக்கு நல்ல குடையென மலைபிடித்த கண்ணனும்
நச்சுப்பாம்பு மீதிலே நடன மாடும் கண்ணனும்
கொடுமை மிக்க கம்சனை கொன்று வென்ற கண்ணனும்
தூது சென்று பாண்டவர் துயரம் தீர்த்த கண்ணனும்
பரிந்து பாடும் அன்பர்கள் பாவம் தீர்க்கும் கண்ணனும்
கூடிப்பாடும் தொண்டர்கள் குறைகள் நீக்கும் கண்ணனும்

மேவரும் ஞானனந்த வெள்ளமாய் விதித்தோன் ஆகி
மூவருமாகி, அந்த மூவர்க்கும் முதல்வனுகி
யாவரும் யாருமாகி இறைஞ்சுவார் இறைஞ்சப் பற்பல
தேவரும் ஆகி நின்ற செங்கண்மால்! எங்கள் கோவே!

முழுவதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கு நிலையும்
வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும், அந்நோக்கும் அணிகொள்
செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவைகண்ட யசோதை தொல்லை
இன்பத்து இறுதி கண்டாளே.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரக்கன் என் அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே.

கண்ணா கண்ணா கார்முகில் வண்ணா
கண்ணா கண்ணா ஆழிமழைக் கண்ணா
கமலக் கண்ணா கமலப் பாதா
காத்தருள்வாயே கருணாகரனே

அங்கயற்கண்ணி அருமை அண்ணு
அடியார்க்குதவும் அச்சுதா உச்சிதா
அம்பு சாட்சதா அனுதரட்சகா
அல்லல் அகற்றிடு அவதார புருடா (க)

ஆண்டாளை யேற்ற ஆதிமூலா
ஆதி மத்தியாந்த ரகிதா முகுந்தா
ஆயர் குலத்தில் பிறந்த தேவா
ஆபத்திலுதவிடு ஆபத் பாந்தவா (க)

பிருந்தா வனத்தில் உறையும் கண்ணு
பிரமனைப் படைத்த பிரம பராயணு
சித்தி விலாசா திரிவிக்கிரமா
இருதயத் துறைந்திடு இருசிகேசா (க)

சீதையை மணந்த சீதா மனோகரா
சிறீ தரா சிறீ லோலா
சிறீ ராமா சிறீ ரங்கா
சீக்கிரம் வந்திடு பீதம்பரா (க)

புண்ணிய புருசா புண்டரீக வரதா
துன்பம் தீர்க்கும் துளசீ தரா
உறியில் தயிரை உண்டவாயா
உரலில் கட்டுண்டு கிடந்தேனே (க)

எல்லாம் வல்ல சர்வ காரணா
எங்கும் நிறைந்த பரி பூரணா
வெண்ணெய் உண்ட வெங்கடாமணா
பெருமாள் நீயே புருசோத்தமா (க)

வேங்குழல் இசைக்கும் வேணு கோபாலா
தேவரைக் காத்தாய் தேவதேவா
தேடி வந்தேன் தேவானுகூலா
கேசவா நீயும் பேரருள் தந்திடு (க)

வையம் காக்கும் வைகுந்தா
ஐவரைக் காத்தாய் சனார்த்தனா
வைகுண்ட முறையும் வெங்கடேசா
கையில் கோதண்டம் ஏனோ ராகவா [க]

பொன்னும் மணியும் அணிந்த தேவா
கொடிய பாம்பில் நடனம் ஏனோ?
கொண்டல் வண்ணா குடக்கூத்தா
தொழுது நிற்பேன் உன் திருவடியே (க)

கோதண்டராமா கோபால கிருஷ்ணா
கோபியர் விரும்பும் லோக நாயகா
ஓம் நாராயணா சிறீ நாராயணா
சோதனை ஏனோ சங்கு சக்கரா (க)

பச்சை மா மலைமேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரிலுள்ளானே

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசிந்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே!

வேதநூல் பிராயம் நூறு மனிதர் தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரிலுள்ளானே.

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாங்குழுமித்
திருப் புகழ்கள் பலவும் பாடி.
ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர் மழைசோர
நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும் திருவரங்கத்து
அரவணையில் பள்ளிகொள்ளும்
போராழி அம்மானைக்கண்டு துள்ளிப் பூதலத்தில் என்று
கொலோ புரளும் நாளே.

புல்லாங் குழலின் இன்னிசையாலே
உள்ளங் குழைய செய்திடும் கண்ணா
புண்ணிய புருசா புருசோத்தமனே
புகழ்கள் கேட்டு மகிழ்ந்திட வா வா

அரவம் மேலே துயிலும் நாதா
அமரர் போற்றும் அரியெனும் தேவா
அன்பு நிறைந்த உள்ளம் அறிந்தே
அதிலே நீயும் அமர்ந்திட வா வா (பு)

ஆழி மழைக்கண்ணு ஆனந்த சொரூபா
ஆதி பூதனே ஆத்ர் கொழுந்தே
ஆண்டாள் பூண்ட பூமாலை யதனை
ஆசையாய் அணிந்த நாரணு வா வா [பு]

மின்னல் ஒத்த சக்கரத்துடனே
இடியை ஒத்த சங்கை ஏந்திய
விட்டுணு என்னும் தெய்வமும் நீயே
இன்னல் தீர்த்து அருள்தர வா வா (பு)

தீவினை தீர்க்கும் தீனதயாபரா
சீரும் செல்வமும் தந்திடும் தேவா
மீனவதாரமும் எடுத்த மாதவா
ஈர்த்தே எம்மை ஆட்கொள வா வா (பு)

உன்னிடம் எம்மை உவந்து அளித்து
உயிர்கள் யாவையும் அன்புடன் நோக்கி
உண்மை வாழ்வு வாழ்ந்திடச் சொன்ன
துளசி அணியும் தேவா வா வா (பு)

பூமி நாதனே மூல மூர்த்தியே
கூடிப் பாடியே கூத்தும் ஆடியே
பூவும் நீரும் தூப தீபமும்
பூவண்ண நாதா தந்திட வா வா (பு)

எல்லா உயிரையும் காக்கும் கண்ணா
நெஞ்சம் உருகி கண்ணீர் பெருக்கி
கெஞ்சி நிற்கும் அடியார்க் கருளும்
பெற்றம் மேய்த்த பேராளா வா வா (பு)

கேசவனென்னும் மாயக் கண்ணா
பேரோயிரம் உடைய தேவா
பேணுவார் அமுதே பெரிய அம்மானே
பேரின்பம் தந்திட தேனே வா வா [பு]

வைகுந்தா நாதா மணிவண்ண நாதா
பைந்தலை நாகம் பஞ்சணையாக
மைநிறக் கண்ணா துயில்வது ஏனோ?
வையம் காக்க வாமனா வா வா (பு)

பொன்னும் மணியும் துலங்கிடும் தேவா
தொண்டே செய்து தொழுது நிற்க
கொண்டோம் உன்னடி நந்த கோபாலா
தொண்டர்க்கருள வா வா வா (பு)

போற்றி போற்றி கார்வண்ணா போற்றி
போற்றி போற்றி உன்னடி போற்றி
கோவிந்தா சரணம் சரணம் சரணம்
கோபாலா சரணம் நின்தாள் சரணம் (பு)

மங்கல நல்வனமாலை மார்பில் இலங்க மயில்தலைப்
பீலி சூடி
பொங்கிள வாடை அரையில் சாத்தி பூங்கொத்துக்
காதில் புரைப்பெய்து

கொங்கு நறுங் குழலார்களோடு குழைந்து குழலினிது
ஊதி வந்தாய்
எங்களுக்கே ஒருநாள் வந்து ஊத உன் குழலினிசை
போதராதே?

செம்பெரும் தடங்கண் திரள்தோளன் தேவகி சிறுவன்
தேவர்கள் சிங்கம்
நம் பரமன் இந் நாள் குழல் ஊதக் கேட்டவர்கள்
இடருற்றனர் கேளீர்
அம்பரம் திரியும் காந்தர்ப்பர் எல்லாம் அமுத கீத
நிலையால் சுருக்குண்டு
நம்பரமன் என்று நாணி மயங்கி நைந்து சோர்ந்து
கைம்மறித்து நின்றனரே.

கற்றாரெனினும் பதினான்குலகும்
கண்டாரெனினும் தண்டா மிகுபற்று
அற்றார் எனினும் திருமால் அடியார்
அல்லாத அவர் வீடில்லாதவரே

பொற் தாமரையாள் கணவன் உறையும்
பொற் கோயிலையே புகழ்வார் பணிவார்
மற்றூர் எனினும் பெற்றூர் அவரே
வானோர் திருமா மணி மண்டபமே

கூச மொன்றும் இன்றி மாசுணம் படுத்து வேலைநீர்
பேசநின்ற தேவர்வந்து பாடமுன் கிடந்ததும்
பாசம் நின்ற நீரில் வாழும் ஆமையான கேசவா
ஏச அன்று நீ கிடந்தவாறு கூறு தேறவே.

நிற்பதுவும் ஓர் வெற்பகத்து இருப்பும் விண் கிடப்பதும்
நற்பெரும் திரைக் கடலுள் நானிலாத முன்னெலாம்
அற்புதன் ஆனந்த சயனன் ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே.

திருமாலே நம் நெடுமாலே நீள் துயில் கொள்ளும் நெடுமாலே
திருமார்பினிலே திருமகளை வைத்து மகிழும் திருமாலே
திருப்பதி உறையும்திருமாலேபொன்னுலைஉறையும்திருமாலே
திருமாலே எம் பெருமாளே திருவருள் தந்திடும் திருமாலே

அச்சுதா என்னும் திருமாலே அன்புடன் அழைப்போம்
திருமாலே
பஞ்சபாண்டவரைக் காத்திடவே பாரினில் வந்தாய்
திருமாலே
மாபலி கர்வம் அடக்கிடவே மூவடி அளந்தாய் திருமாலே
மாந்தரைக் காக்கும் மாயவா மனத்துயர் தீர்த்திடு
திருமாலே (திரு)

இன்றும் எம்மைக் காத்திடவே எழும்பி நீவா திருமாலே
தினந்தினம் உன்னைத் தொழுவோமே நின்னருள்
தந்திடு திருமாலே
கீதம் இசைத்து யாவரையும் மயங்கச் செய்யும் திருமாலே
மீனவதாரம் எடுத்தவனே தீவினை தீர்த்திடு திருமாலே (திரு)

புல்லாங் குழலுடன் வருவாயே எம்மைக் காக்கும் திருமாலே
உன்னடி பணிந்து புகழ்ந்திடவே நீயருள் செய்வாய்
திருமாலே
பூபாரம்தனைத் தீர்த்திடவே பூமியில் பிறக்கும் திருமாலே
தூணிலிருந்து வெளிவந்தே பக்தனைக் காத்தாய்
திருமாலே (திரு)

எல்லோரும் கடமை செய்துமே பலனை எண்ணோம் திருமாலே
செல்வம்வந்து சேர்ந்தாலே கோத்தே வையோம் திருமாலே
வேலனும் நீயும் ஒருவனின்றி வேற்றுமை உண்டோ
திருமாலே
வேல் வேல் என்னும் போதினிலே வேங்குழல் இசையே
திருமாலே (திரு)

கையில் கோதண்டம் ஏந்தியே வையம் காக்கும் திருமாலே
மைநிறக் கண்ணா நீயுமே எம்முள் உறைவாய் திருமாலே
ஒன்றும் அறியோம் திருமாலே உன்னடியே துணை திருமாலே
ஒற்றுமையாக எல்லோரும் வாழச் செய்வாய்
திருமாலே (திரு)

போற்றி நிற்போம் திருமாலே ஓடி வா வா திருமாலே
தோத்திரம் பலவும் சொல்வோமே தேடி வா வா திருமாலே
ஓதுவோம் என்றும் திருமாலே உன் நாமம் தனையே
திருமாலே
கோபம் தன்னை அடக்கிடவும் வழி சொல் நீயே திருமாலே

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில் நின் பாதமூலம் பற்றினேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா அரங்கமா நகரிலுள்ளானே

மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோர் இன்சொலில்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன் வாளா
புனத்துளாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கு இனிக் கதியென் சொல்வாய் என்னையாள்
உடைய கோவே

பேரே உறைகின்ற பிரான் இன்று வந்து
பேரேன் என்று என் நெஞ்சு நிறையப் புகுந்தான்
கார் ஏழ் கடல் ஏழ் உலகு உண்டும்
ஆரா வயிற்றானை அடங்கப் பிடித்தேனே

பிடித்தேன் பிறவி கெடுத்தேன் பிணி சாரேன்
மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பது ஓர் மாயையை
கொடிக்கோபுர மாடங்கள் சூழ் திருப்பேரான்
அடிச் சேர்வது எனக்கு எளிது ஆயின வாறே

கண்ணா என்று சொல்லியே கவலையின்றி வாழடா
அரியை என்றும் எண்ணியே எவர்க்கும் அன்பு செய்யடா

நாராயணனை நினைத்துமே நன்மை செய்து வாழடா!
ஆயர் கொழுந்தை நாடியே ஆணவத்தை அடக்கடா!

பீதாம்பரனைத் தேடவே நீயும் உலகில் வாழடா!
ஈசன் அவன் ஒருவனே நீயும் அதை அறியடா!

உண்மை வாழ்வு வேண்டியே கடமை செய்து வாழடா!
உலகிலுள்ளோர் எவருமே ஒரே குலம் தானடா!

ஊமை போல வாழ்ந்துமே பக்தி செய்து வாழடா
சூது வாது இன்றியே நேர்மை வழி சொல்லடா!

செல்வம் வந்து சேர்ந்தாலே தர்மம் செய்து வாழடா
என்றும் அவனை நினைத்துமே நன்றி கூறிப் புகழடா,

வேண்டி வந்து நின்றாலே உதவி செய்து வாழடா!
தேவையின்றி ஒன்றுமே வேண்டாமென்று எண்ணடா.

ஐம்புலன் அவற்றையே அடக்கி என்றும் வாழடா!
வைகுந்தன் தன்னையே அச்சமின்றி நாடடா.

பொறுமை ஏற்று நின்றுமே வெற்றி பெற்று வாழடா!
பொன்னும் பொருளும் யாவுமே மாயை என்று விலக்கடா.

கோபம் இன்றி என்றுமே நல்லவன் ஆக வாழடா!
கோபால கிருட்ணனே துணையென்று நம்படா.

பௌவக் கடலை நீந்தவே பச்சை வர்ணன் துணையடா!
மௌனியாகப் படுப்பவனே மா மாயக் கண்ணனடா.

கண்ணா என்று சொல்லியே கவலை இன்றி வாழடா -
கவலை இன்றி வாழடா!
அரியை என்றும் எண்ணியே எவர்க்கும் அன்பு செய்யடா -
எவர்க்கும் அன்பு செய்யடா.

அகரமென அறிவாகி அகிலரச அசரவுயிர்
ஆக்குவதும் ராம நாமம்
ஆழ்வார்கள் பன்னிருவர் பாடுதமிழ் மாமறைகள்
அறைவதும் ராம நாமம்
உகரமென அண்ட பகிரண்டத்துள் உயிர் கடமை
ஓம்புவதும் ராம நாமம்
ஓதரிய நான் மறைகள் உபநிடதம் ஆகமத்து
உட்பொருளும் ராம நாமம்

மகரமென நின்றுலகின் மன்னுயிர்கள் யாவையும்
மறைத்தருள்செய் ராம நாமம்
மாமறைகள் ஏத்தரிய வைகுந்த வீட்டினிடை
வாழ்வதுவும் ராம நாமம்
திகரில் பரஞான மோனத்தவர் உளந்தனில்
நின்ருெளிரும் ராம நாமம்
நேடிய தெலாமுதவு தேவர்துயர் தீர்த்தருள்செய்
நேச ராம ராம ஜயமே.

அரே ராம! அரே ராம! - ராம ராம! அரே! அரே!
அரே கிருட்ண! அரே கிருட்ண! - கிருட்ண கிருட்ண!
அரே அரே! (3 தரம்)

அங்கண் நெடுமதில் சூழ் அயோத்தி என்னும்
அணி நகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி
விண் முழுது முயக் கொண்ட வீரன் தன்னை

செங்கண் நெடும் கருமுகிலை இராமன் தன்னை
தில்லை நகர்த் திருச் சித்ரக் கூடந் தன்னுள்
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே.

சிறீ ராம் செயராம் - செய செய ராம் ஓம்
சிறீ ராம் செயராம் - செய செய ராம் (3 தரம்)

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம வென்றிரண் டெழுத்தினுல்

அம்பொன் நெடுமணி மாட அயோத்தி எய்தி
அரசெய்தி அகத்தியன் வாய்த்தான் முன்கொன்றான்
தன்பெருந் தொல்கதை கேட்டு மிதிலைச் செல்வி
உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்

செம்பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான்
தில்லை நகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணுல்
பருகுவோம் இன் அமுதம் மதியோம் அன்றே.

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலை ராமன் தோள்வலி கூறுவார்க்கே.

ராம ராம ராம ராம ராம ராம தாரகம்
நாம கிருட்ண வாசு தேவ பக்தி முக்தி தாயகம்
ஜானகி மனோகரம் சர்வலோக நாயகம்
சங்கராந்தி கீயமான புண்ணிய நாம கீர்த்தனம்

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணுத மெய்ப்பொருள்
கண்ணிலாணியாகவே கலந்து நின்றது எம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வது உண்மையே.

அந்தி காலம் உச்சி மூன்று ஆடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப்ப பணங்களும் தபங்களும் செபங்களும்
சிந்தை மேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.

ராம ராம ராம ராம - ராம ராம ராம்
ராம ராம ராம சீதா - ராம ராம ராம் (3 தரம்)

ரகுபதி ராகவ ராசா ராம் - பதீத பாவன சீதாராம்
அயோத்தியவாசி ராம நமோ - கோகுல வாசி
கிருட்ண நமோ (3 தரம்)

ஓம் நமோ நாராயணு - ஓம் நமோ நாராயணு
நாராயணு நாராயணு - ஓம் நமோ ராராயணு (3 தரம்)

கோவிந்த நாம சங்கீர்த்தனம் - கோவிந்தா! கோவிந்தா!
ஜானகி ஜீவன சமரணம் -- ஜே! ஜே! ராம! ராம!

சிறீமன் நாராயணுய நமக.

சிறீராம் செயராம்
செயராம் ஓம்
சிறீராம் செயராம்
செய செயராம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.



ராஜா அச்சகம், நாவலப்பிட்டி